As he got close to the mango. the Earth became dark. The mango was actually the sun! Lord Indra (God of Thunder) in fear of this eclipse caused lightening which struck him and made him fall back to Earth. As He fell the Earth's air began to suck up. People started to lose their breath and the rest of the Gods' realised who Anjaneya really was..



*All the Devas came forward and blessed him with additional superpowers each, as an apology. From then began the tale of this superhero who became known as Hanuman as he broke his jaw as a result of his fall ('Han' means 'jaw' in Sanskrit). This story teaches us to aim high like Hanuman did as a child. He aimed for high goals no matter how unrealistic and never gave up. He grew up to be the wisest of the wise and bravest of the brave because of this. Even though he was knocked out half way in the sky, he didn't actually lose. He was given countless superpowers and later in his life the Sun dev Surya came to be his teacher.*

*So like Hanuman, we all should always aim high, don't try to study for a B, study for the highest mark. Even if you do fall then, just like Hanuman did, you will still get to the highest ever possible!*

*Remember to recite the 'Hanuman Chalisa' which reminds Lord Hanuman of His Superpowers. That way you too can be as strong, clever and a winner like He was!*

By Anju Bhardwaj

facebook.com/LordShriHanuman


LIGHTING OF THE LAMP
Mr and Mrs . S. Balasingam

யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
அபிவிருத்திச் சங்கம்
J/NEERVELY ATTIAR HINDU COLLEGE
DEVELOPMENT SOCIETY
Phone : 021 2230499

20/09/13

## வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரி பழைய மாணவர்கள் நலன்புரிச்சங்கம் ஐக்கிய இராச்சிய கிளையினால் பதினோராவது வருடமாக கொண்டாடப்படும் "கலை மாலைப்பொழுது" ஒன்றுகூடல் நிகழ்விற்கும், "கலைமாலை" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்விற்கும் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழச்சியடைகிறோம்.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தபோதிலும் தமது கல்லூரித்தாயின் மீதும், பிறந்த மண்ணின் மீதும் கொண்ட அளவற்ற பற்றினால் சங்கம் அமைத்து தமது உடன்பிறவா சகோதரங்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் எதிர்கால சுபீட்சத்திற்காகவும் அயராது உழைத்து வரும் பழைய மாணவர் நலன்புரிச்சங்க ஐக்கிய இராச்சிய கிளைத்தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களை எமது சங்கம் சார்பில் வாழ்த்துகின்றோம்.

எவ்வளவோ வேலைப்பழுக்களின் மத்தியிலும் தமது கல்லூரித்தாயின் அபிவிருத்தியில் அதீத ஈடுபாட்டுடன் செயற்படும் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், கல்லூரி அதிபர் அலுவலகத்தை இவ்வருடம் 1.6 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

எதிர்காலத்திலும் இச்சங்கமானது எமது கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் கல்லூரியின் அபிவிருத்திக்கும் சிறப்பான பணியினை ஆற்றிடவும் கலைமாலை பொழுதும், கலை மாலை சஞ்சிகை வெளியீடு சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**செ.பத்மநாதன்**
**தலைவர்**

**க.சண்முகநாதன்**
**செயலாளர்**

# கலை மாலைக்கு வாழ்த்துச் செய்தி



அத்தியார் இந்துக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கம் கலை மாலை என்ற மலரை வருடா வருடம் வெளியிடுவது வழக்கம் ஸ்தாபகர் முகாந்திரம் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் 1953ல் லண்டன் எலிசபெத் மகாராணியால் பெற்ற வெள்ளிப்பதக்கம் அவரது தன்னலம் கருதாத செயலை உறுதிப்படுத்துகிறது. அப்படியான செயல் வீரனது நிர்வாகத்தில் கல்வி கற்ற மாணவ மாணவிகளும் இன்று அவருக்காக மலர் வெளியிடுகிறார்கள் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு கனடாவில் உள்ள பழைய மாணவர்கள் ஸ்தாபகர் மறைந்து 52 ஆண்டுகளை நினைவு கூறுமுகமாக முத்திரையை வெளியிட்டுள்ளார்கள். இவ்வாறு ஸ்தாபகரின் இறப்பின் பின் அவரது ஏக புதல்வன் பாலசுப்பிரமணியம் ஆசிரியரால் அஸ்தி அடங்கிய பேளை கல்லூரி வளவில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்திற்குள் வைக்கப்பட்டுள்ளது.

வருடா வருடம் ஸ்தாபகரின் குடும்பத்தினரால் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்திய பின் கல்லூரி சமூகத்தினரால் மலர் அஞ்சலி செலுத்தி பாடசாலையில் நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்று வருகின்றமை ஸ்தாபகரின் அர்ப்பணிப்பான செயல் மக்கள் மத்தியில் பதிந்துள்ளது என்பது தெரிகின்றது.

மேலும் இக்கல்லூரி வளர்ச்சி பெற்று இப்பிரதேச மாணவர்களின் நிறைவான கல்விக்கு ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கக் கிளை பக்கபலமாக இருக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.



**திருமதி. இ. சிவகுமாரன்**

**ஆசிரியை,**
**யா/ அத்தியார் இந்துக் கல்லூரி,**
**நீர்வேலி.**



Welcome speech by Mrs. S.Sureshkrishna



President's speech by mr. M.Thiruvasagam



Program hosted by Mr. P.Sivasupramaniam



Prayer by Mrs. P.Thurasaamy



Chief Guest speech by Mr. T.Parajasingham



Tamil Thai Vazthu by Mr. Tharshan



















Dance performances by Students of Anusha Sajeev

Activate Win











Dance performances

By Students of

Anusha Sajeev














**Dance performances**
**By Students of**
**Anusha Sajeev**



Teacher Mrs. Malini Thanabalasingam





Veena performance by miss Durga Ragulabaskaran





Miruthangham by Mr Rajeevan Thanabalasingam

# அனுபவம் அறிவு

**அ**ன்று இலண்டனில் அத்தியார் பள்ளிக்கூட பழையமாணவர் வருடாந்த ஒன்றுகூடல். மண்டபம் நிறைந்த அன்பர்கள் கூட்டம், அதற்கு ஒரு காரணம் பிரபல வீணை வித்துவான் திரு ராஜேஷ் வைத்தியா அவர்களின் நிகழ்ச்சிப் பங்கேற்ப்பு. கலைவாணி, அவர் கைகளில் தவழ்ந்து வீணையின் நரம்புகளுடன் விளையாடுவதை பார்பதற்கும், அந்த இசையை கேட்டு ரசிப்பதற்கும், நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும் . எனது
புண்ணியக் கணக்கிலலும் கொஞ்சம் மீதி இருந்ததால், இவரது இசைக் கச்சேரியை இரண்டாவது தடவையாக அனுபவிக்கக் கிடைத்ததை எண்ணி மகிழ்வுடன் மண்டபத்தின் ஒரு மூலையில் ஒதுங்கிக்கொண்டேன். இப்படி மகிழ்வுடன் இருந்த என் தோள்களை யாரோ தட்டுவது போன்ற உணர்வு, திரும்பிப் பார்த்த என்னை முறைத்துப் பார்த்தது ஒரு உருவம் 'தம்பி நீர்தானே சாதி சம்பிரதாயம் என்று போன இதழில் எழுதினநீர் ?' என் பதிலுக்கு தாமதியாமல் கேள்விகள் தொடர்ந்தன 'உமக்கேன் தேவையில்லாத வேலை, உதைப்பற்றி உமக்கு முதல் எத்தினையோபேர் எழுதியிருக்கினம் , கடைசியாய் என்ன
நடந்தது?'. 'அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகுரும் அல்லே, அதுதான் என்ரை பங்குக்கு நானு ஒரு அடி அடிச்சனான்' என்ற எனது பதில் அவரின் கோபத்தை அதிகமாகியது. 'நான் ஏதோ சொல்லுறன் நீர் அம்மி, ஆட்டுக்கல்லு என்று வேறை ஏதோ கதைகிறீர் , உமக்கென்ன மகாத்மா காந்தி என்று நினைப்பே' என்று முணுமுணுத்தபடி அவர் என்னை விட்டு விலகிக் கொண்டார். ஒரு மனிதனை வில்லங்கப்படுத்தி விட்டேனோ, அல்லது வில்லங்கத்துக்கு நான் விலைப்பட்டு விட்டேனோ, என்ற கேள்வி என்னுள் ஒரு மூலையில் ஒலித்துக்கொண்டே இருந்தது. என் நினைப்பும் எழுத்தும் என் அறிவுக்கெட்டியவரை சரியாக இருந்தால் அதை சொல்லித்தானே ஆகவேண்டும்? மகாத்மா காந்திதான் எல்லாவற்றையும் சொல்லியாக வேண்டுமா என்ன? சத்தியசோதனை பல்லாயிரம் பேருக்கு வழிகாட்டியாக இருந்தால் எனது வாழ்க்கையில் வரும் சோதனைகள் என்னைப்போல் இருக்கும் பத்துப்பேருக்காவது பயன்படலாம் அல்லவா?

சரி விடயத்துக்கு வருகிறேன் ......

ஒரு நாணயத்தை இரு தடவை சுண்டினால் இரண்டுதடவையும் தலை விழுவதற்கான சாத்தியகூறு என்ன? என்ற கேள்வி இங்கிலாந்தில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்கப்பட்டது. இதற்கு நாற்பது வீதமான உறுப்பினர்கள் மட்டுமே சரியான பதில் அளித்தார்கள் (இந்த வினாவின் விடை இருபத்தைந்து வீதம்). என்னடா இதுகூடத் தெரியாதவர்களை நம்பியா எமது நாட்டின் முக்கிய முடிவுகளை எடுக்கும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம் என பலர் நினைக்கலாம். ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு நாணயத்தை சுண்டி நிகழ்தகவு சொல்லுவது முக்கியமா, அல்லது ஒட்டுப்போட்ட மக்களுக்கு நாணயமாக இருபது முக்கியமா? நாம் செய்யும் தொழிலுக்கு எது முக்கியமோ அதில் நாம் கட்டாயமாக திறமை கொண்டிருக்க வேண்டும். மற்றவிடயங்களும் தெரிந்திருந்தால் நல்லது.

நான் சிறுவனாக இருக்கையில் பள்ளிகூடத்தில் தேவாரம் மனனம் செய்யத் தருவார்கள், ஒரு எழுத்துப்பிழை விட்டால் கூட வாங்கின் மேல் ஏறிநின்று அடிவாங்க வேண்டும். ஒரு எழுத்துப்பிழைக்குகூட கடவுள் கையை விட்டுவிட்டாரே? என்று நான் அப்போது கவலைப்படுவதுண்டு . தேவாராம் என்ன சோறா போடப்போகிறது? என கோபத்தில் நான் புறுபுறுத்துக்கொள்வதுண்டு. கல்லை கட்டி கடலில் போடப்பட்ட அப்பர், சொற்றுணை வேதியன் பாடி, விஞ்ஞான விளக்கங்களையும் மீறி, மிதந்ததின் பின்பு எனக்கு தெரிந்தவரை கல்லை கட்டி கிணற்றில் விழுந்து இறைவனை அடைந்தவர்கள் தான் அதிகம். தேவாரம் **போன்ற** விடயங்களை கற்றுக் கொள்ளல் மிக அவசியம், ஆனால் அதற்கு அளவுக்கு அதிகமான நேரமோ தேவைக்கதிகமான முக்கியத்துவமோ கொடுக்கப்பட்டால் அந்த நேரத்தில் வேறு பல

வாழ்க்கைக்கு முக்கியமான விடயங்களை படிக்க முடியாமல் போய்விடும். **தேவாரம் இங்கு ஒரு உதாரணம் மாத்திரமே.**

ஆண்டுகள் பல கழிந்து விட்டன , கடவுளை கனிவு படுத்துவதற்கு ஐந்தாறு தேவாரம் தெரிந்திருக்கிறதே என்று சந்தோசமாக இருந்தாலும், இப்படி தேவாரம் போன்ற விடயங்களில் செலவழித்த நேரத்தில் சிறு பகுதியையாவது ஓரிரு தொழிற்கல்வியை கற்பதில் பயன் படுத்தியிருக்கலாமே என்ற ஆதங்கம் இன்னும் என் மனதிலே இருக்கத்தான் செய்கிறது. நாம் வாழும் சூழ்நிலைக்கேற்ற கல்வி மிக அவசியம், எமது பாட திட்டங்களும் அதற்கேற்றபடி ஒழுங்குபடுத்தப்படவேண்டும். கைத்தொழில், மரவேலை, சங்கீதம் , சித்திரம் , நாடகம், தொழில்நுட்பக்கல்வி போன்ற பாடங்களை கட்டாய பாடங்களாக்கி, அவைக்கும் முதன்மை கொடுக்கப்பட வேண்டும்.

ஒரு சிறு கதை, ஒரு பண்டிதர் ஒவ்வொருநாளும் ஒரு ஆற்றை கடந்துதான் தன் வேலைக்கு செல்வது வழக்கம், அப்படி ஒரு நாள் அவர் சிறு படகு ஒன்றில் செல்லும் போது, அந்தப் படகோட்டும் பையனிடம் கிண்டலாக சில கேள்விகளை கேட்டார் ; 'தம்பி நீ இராமாயணம் படித்திருக்கிறாயா?' இல்லையையா, என்று பதில் கிடைத்தது. பண்டிதர் சொன்னார் 'அப்படியானால் நீ உன் வாழ்கையில் அரைவாசியை இழந்து விட்டாய் , சரி மகாபாரதம் படித்திருக்கிராயா?' அதற்கும், இல்லை என்று பையன் பதிலளித்தான். பண்டிதர் உடனே சிறிதாக சிரித்தபடி ' நீ உன் வாழ்கையில் எழுபது வீதத்தை இழந்துவிட்டாய்' என்றார். எல்லாவற்றையும் இதுவரை அமைதியாக கேட்ட அந்த பையன் திடீரென 'ஐயா , உங்களுக்கு நீச்சல் தெரியுமா?' என்றான். 'இல்லையடா தம்பி' என்று பதற்றப்பட்ட பண்டிதரைப் பார்த்து , 'ஐயா, படகில் ஒரு ஓட்டை வந்து ஆற்று நீர் உள்ளே வந்து கொண்டிருக்கிறது, படகு சிறிது நேரத்தில் ஆற்றில் தாழ்ந்து விடும், நான் நீந்தி தப்பிக் கொள்வேன் ஆனால் நீச்சல் தெரியாத உங்கள் வாழ்க்கையே முடியப்போகிறதே என்பதை நினைக்க வேதனையாக இருக்கிறது' என்றான்.

தேவைக்கு ஏற்றால் போல் எம் கல்வியும் திறமையும் இருக்க வேண்டும். காட்டில் வேட்டையாடி உண்பவனுக்கு கம்பராமாயணத்தை கரைத்துக் குடித்து என்ன பயன்? (மாரீசன் என்ற மானுக்கு இராமன் அம்பெய்தாரே அதைப் பார்த்து விலங்குகளை வேட்டையாட பழகலாம் என்று சிலர் மனதுக்குள் நினைப்பது புரிகிறது)

நாம் எந்தத் துறையில் கல்வி கற்றாலும், ஏட்டுக் கல்வியுடன் முடித்துவிடாது அதை செயற்கையிலும் பயன் படுத்த வேண்டும். ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்? எவ்வளவுதான் கல்வி கற்றாலும் அதை சந்தர்ப்பம் வரும் போது உபயோகிக்க தெரிந்திருக்க வேண்டும். எம் கண் முனால் இருக்கும் வாய்ப்புகளை எத்தனை தடவை நாம் தெரியாமல் நழுவ விட்டிருக்கிறோம்? இப்படியான வாய்ப்புகளை கண்டறிந்து அதை எமது வாழ்க்கைக்கு சாதகமாக உபயோகித்துக்கொள்ளும் திறனை நாம் வளர்த்துக்கொள்வது மிக அவசியமாகும்.

ஒரு உதாரணம், ஒரு அடர்ந்த காட்டின் நடுவே பிரசித்தி பெற்ற கோவில் ஒன்று இருந்தது. இந்தக் கோவிலுக்கு மணி அடிப்பதற்கு ஆள் தேவையென விண்ணப்பம் கோரி இருந்தார்கள். இந்த வேலைக்கு ஒரு வறிய குடியானவனும் விண்ணபித்திருந்தான். ஆனால் அவனுக்கு படிப்பு அதிகம் இல்லையெனக்கூறி அந்த வேலையை அவர்கள் கொடுக்கவில்லை. வேலை கிடைக்காத கவலையில் காட்டு வழியே நடந்து கொண்டிருந்த குடியானவனுக்கு பெருந் தாகம் எடுத்தது ஆனால் அவன் எங்கு தேடியும் தாகத்தை தீர்க்க நீர் கிடைக்கவில்லை. இப்படித்தானே காட்டு வழியே கோவிலுக்கு செல்லும் பக்தர்களும் அவஸ்த்தைப் படுவார்கள் என நினைத்து அவன் ஒரு தேநீர்க் கடையை ஆரம்பித்தான். சிறிதாக ஆரம்பித்த அந்தக் கடை நாளடைவில் மிகப்பெரிதாகியது. இப்படி இருக்கையில் அந்தக்கோவிலுக்கு ராஜ கோபுரம்

கட்டி அதன் விழாவிற்கு ஒருவரை பிரதம விருந்தினராக அழைத்திருந்தனர். விழாவன்று பிரதம விருந்தினரை பார்த்த கோவில் தர்மகர்த்தாவுக்கு பெரும் அதிர்ச்சி , காரணம், அந்த பிரதமவிருந்தினர் வேறு யாருமல்ல, மணியடிக்கத் தகுதியில்லாத குடியானவன் தான் அவன். தனக்கு நிகழ்ந்த அந்த கவலையான சம்பவத்தை நினைத்து கவலைப்பட்டு கண்ணீர்விடாது, கிடைத்த சந்தர்ப்பத்தை தன் முன்நேற்றத்துக்கு பயன்படுத்தி பெரிய செல்வந்தனானான் அந்தக் குடியானவன்.

சந்தர்ப்பங்கள் எம்முன் ஒவ்வொரு வினாடியும் விழித்துக் கிடக்கின்றன, அதை அறிந்து பயனாக்கிக்கொள்பவர்கள் முன்னேறுகிறார்கள். மற்றவர்கள் விதியை தூற்றுவதிலேயே வாழ்க்கையை வீணாக்கிவிடுகிரார்கள் .

வாழ்கையில் வளர்ச்சியடைந்து செல்லும்போது, ஒரு நிலையை அடைந்தபின் தனித்து இயங்குவது என்பது மிகக் கடினம், மேலும் மேலும் வளர்ச்சி அடைவதற்கு பலருடன் சேர்ந்து கூட்டாக இயங்குவது மிக முக்கியமாகும் . இப்படிக் கூட்டாக சேர்ந்து வேலை சேயும் போது, ஒவ்வொருவரதும் மனநிலையையும், அறிவுநிலையும் பொறுத்து வாக்குவாதங்களோ அல்லது ஒருவரை ஒருவர் அவமதிப்பதற்கான சந்தர்ப்பங்களோ உருவாகலாம். இப்படியான நேரங்களில் நிதானம் தவறாது, தராதரம் பாரக்காது, எல்லோரது அபிப்பிராயத்துக்கும் மதிப்புக்கொடுத்து நடத்தல் அவசியமாகும். சில நேரங்களில் மற்றவர்கள் கூறுவது முட்டாள் தனமாக தெரிந்தாலும் கூட உடனே கோபப்பட்டு மறுத்துக்கூறி அவர்களைப் புண்படுத்தாது, அவர்கள் கூறியதை ஆற ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர்கள் சொல்லும் எல்லாவற்றையும் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது, ஆனால் அமைதியாக கேட்க வேண்டும்.

ஒரு உண்மை நிகழ்வு, ஒரு நாட்டில் குளிர் காலத்தில் மின்ச்சாரக்கம்பிகளின் மீது பனி விழுந்து , பனியின் பாரத்தால் கம்பிகளில் பெரிய தோய்வுகள் ஏற்ப்பட்டது. இதை எப்படி தடுக்கலாம் என்பதை ஆரைவதற்க்காக ஒரு குழுவை நியமித்தார்களா. இந்த விடயத்தை கலந்தாலோசிப்பதற்கு அவசரக்கூட்டம் ஒழுங்குசெயப்பட்டது. ஒருவர் கூறினார், இந்த கம்பிகளின் மீது எலி போன்ற ஒரு சிறு பிராணியை ஓட விட்டால் எல்லாப் பனியும் விழுந்து விடும் என்று. அடுத்தவர் சொன்னார் எலி போன்ற பிராணி ஏன் இப்படியான உயரக்கம்பிகளின் மீது ஏறவேண்டும்? அது ஏறுவதானால் அதை கவருவதற்கு எதாவது உணவு இருக்கவேண்டுமல்லவா என்றார்.
அப்படியானால் இறைச்சி போன்ற மாமிசத்தை அந்தக்கம்பிகள் மீது தொங்கவிடலாம் என்றார் இன்னொருவர். இப்படி உயரமான இடத்தில் இறைச்சியை எப்படித் தொங்கவிடுவது? என கேள்விகள் எழுந்தது. உலங்கு வானூர்தியில்(கெலிக்கொப்டெர்) இறைச்சியை கொண்டு சென்று கம்பிகள் மீது போடலாமே என்று ஒருவர் கூறினார். இதையெல்லாம் அமைதியாக அவதானிதுக்கொண்டிருந்த ஒரு அங்கத்தவர் சொன்னார், உலங்கு வானூர்தியை கம்பிகளுக்கு கிட்டக் கொண்டு சென்றாலே அதன் காத்தாடியின் விசையால் பனி விழுந்துவிடும் அல்லவா எனவே இறைச்சிக்கு அவசியம் தேவையில்லையே என்று. எல்லோரும் பனியை நீக்குவதற்கு இதுதான் வழி என ஏற்றுக் கொண்டார்கள். எலியில் ஆரம்பித்தது கடைசியில் கெலியில் வந்து முடிந்தது. முட்டாள் தனமான உரையாடல்களும் முடிவில் பயனுள்ளதாக முடியலாம் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இப்படி வாழ்க்கையில் கிடைக்கும் சிறிய சிறிய அனுபவங்கள் பல, எல்லாவற்றையும் எழுத இங்கு இ டம் போதாது. நான் தொடக்கத்தில் கூறியது போன்று, இவை எல்லோருக்கும் பயன்கொடுக்காவிடாலும் ஒரு சிலராவது இவற்றால் பயனடையலாம் என்பது என் நம்பிக்கை. நான் எழுதியதில் குறை இருந்தால் தயக்கமின்றி கூறுங்கள். அந்த அனுபவத்தையும் அறிவாக்கிக் கொள்கிறேன்.

வாழ்க்கை, வாழ்க்கை என்று பலதடவை மேலே கூறியிருக்கிறேன். என்னடா வாழ்க்கையிது ?

வாழ்க்கை என்றால் என்ன ? என்ற கேள்விகள் எமது மனதில் குறைந்தது ஒரு தடவையாவது தோன்றி இருக்கும். நாம் எடுக்கும் முக்கிய முடிவுகளின் விளைவுதான் வாழ்க்கை. இந்த முடிவுகளில் பல நேரங்களில் சரி எது பிழை எது என்று கூறமுடியாது, ஒவ்வொருவருடைய தேவையையும் அவர்களுக்கு கிடைத்த தகவல்களையும் பொறுத்து முடிவுகள் மாறுகின்றன. இப்படி நாம் எடுக்கும் முக்கியமான முடிவுகள் வாழ்க்கையின் பாதையும் மாற்றி விடுகின்றது. ஆகவே எந்த ஒரு முடிவையும் எடுக்கும் முன் எமக்குத்தேவையான எல்லா தகவல்களையும் சேகரித்து கொள்வது மிக முக்கியமாகும். அவதிப்பட்டு, தேவையான தகவல்களை சேகரிக்காமல், ஆராயாமல் எடுக்கும் முடிவுகள் எம்மை பிழையான பாதையில் கொண்டு சென்றுவிடும், எனவே எமது வாழ்கையின் ஒவ்வொரு படிகளிலும் முடிவுகளை ஆராய்ந்து எடுப்பது முக்கியம். என்னடா அறிவுரை சொல்கிறானே, **இவன் எல்லாம் சரியாகவா செய்கிறான்?** என்று உங்களுக்கு கேள்வி எழுந்தால், அதற்க்கு என் பதில் **'இல்லை'.** நான் விட்ட பிழைகளை மற்றவர்களும் விடக்கூடாதல்லவா? அதற்காகத்தான் என் அனுபவத்தில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முனைந்தேன். அனுபவத்தை விட பெரியா ஆசான் ஆருமே இருக்க முடியாது!

எமது முடிவுகள் அதிகமாக எமது, அல்லது எம்மில் பலரது, சந்தோசத்தையே குறியாகக் கொண்டு எடுக்கப்படுகின்றன. இந்த முடிவுகளால் எமக்கு எப்படியான வாழ்க்கை அமைந்தாலும், அதில் இன்பத்தை தேடி கண்டுகொள்ளும் மனநிலையை நாம் ஏற்படுத்திக்கொள வேண்டும். விரக்தியடைந்து வாழ்கையை தொலைத்துவிடக்கூடாது.

**ஒரு துன்பம் வந்தால் அதை இன்பம் என்று எண்ணி வாழ்ந்துவிட்டால் சந்தோசம் காணாத வாழ்வுண்டா ?**

***Life is no brief candle for me. It is a sort of splendid torch which I have got hold of for the moment, and I want to make it burn as brightly as possible before handing it on to future generations.***

***- George Bernard Shaw -***

*அன்புடன்* **கனகசபேசன் அகிலன்**







Veena performance by Rajesh Vaidya







# Thanks to the 2012



# Audience and Volunteers





# கல்லூரியின் முன்னாள் அதிபரின் வாழ்த்திதழ்

நீர்வேலிக் கிராமத்தின் மத்தியில் கடந்த எண்பது ஆண்டுகளுக்கு மேலாக கல்விப்பணி ஆற்றி வரும் அத்தியார் இந்துக் கல்லூரிக்கு இலண்டனில் வாழும் கல்லூரியின் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் இணைந்து வெளியிடும் " **கலை மாலை** " மலருக்கு வாழ்த்திதழ் வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

முகாத்திரம் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் சிந்தனையில் ஊற்றெடுத்து நீர்வேலியில் உயர்ந்து நிற்கும் இக் கல்லூரி பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளை இப் புவிக்கு அளித்த பெருமைக்குரியது. அறிவை மட்டுமன்றி சமூகத்திற்குரிய நற் பண்புகளையும்இக் கல்லூரி , தன்னை நாடிவருவோர்க்கு ஊட்டி வருகின்றது. இதற்கு இலண்டனில் சிறப்புடன் செயற்பட்டு வரும் " **நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர் நலன் விரும்பிகள் சங்கம்** " நல்லதோர் எடுத்துக் காட்டாகும். முந்தித் தவமிருந்து முன்னூறு நாள் சுமந்து அந்தி பகலாய் இறைவனை வந்தித்து பெற்றெடுத்த தாயையே சிலர் மறந்து வாழும் இன்றைய சமூகத்தில் தாம் கற்ற கல்லூரித் தாயை மறக்காது ஆண்டு தோறும் விழா எடுத்து மகிழும் இலண்டன் வாழ் நீர்வேலி அன்பர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

மலர் வெளியீட்டுடன் **தமிழர் கலை பண்பாட்டு அம்சங்களையும்** மங்கவிடாது அடுத்த தலை முறைக்கும் கடத்திச் செல்லும் உயரிய பண்பை மனமார வாழ்த்துகிறேன். பல்வேறு வேலைச் சுமைகளின் மத்தியிலும் கடந்த பதினொரு ஆண்டுகளாக கலை மாலை மலர் வெளியீட்டுடன் அரங்கத்தில் கலை நிகழ்வுகளையும் நடாத்தி வரும் சங்கத்தின் முயற்சிகள் என்றும் போற்றுதற்குரியன.

இச் சங்கம் விழாக்கள் எடுப்பதுடன் மட்டுமல்லாது கல்லூரியின் உயர்வுக்கும் கைகொடுத்து உதவி வருகின்றது. ஒரு தசாப்த காலம் கல்லூரியின் அதிபராக நான் கடமையாற்றிய காலத்தில் கல்வித் தேவைக்கும் பௌதிகவள

விருத்திக்கும் இச் சங்கம் ஆற்றிய பங்களிப்புக்கள் அளப்பரியன. அத்தகைய உதவிகள் இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. ஸ்தாபகர் காலத்தில் அமைக்கப்பட்டு சாள்ஸ் ஸ்ரீபன் என்ற பிரித்தானிய அதிகாரியினால் திறந்து வைக்கப்பட்ட அலுவலகக் கட்டிடம் அழிந்தொழிய விடாது மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்பதற்கு இச் சங்கமே காரணமாகும். 1.5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை கல்லூரிக்கு வழங்கி கட்டிடத்தின் எழில் குன்றாது புனரமைப்புச் செய்துள்ளனர். **உண்மை – நேர்மை** என்பவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு இச் சங்கம் செயற்படுவதால் எதிர் காலத்திலும் அதன் பணி தொடரும் என்பதில் ஐயமில்லை.

சங்கத்தின் தலைவர் திரு மா.திருவாசகம் , செயலாளர் திரு S.செல்வநாதன் , பொருளாளர் திரு S.சுபேஸ்குமார் மற்றும் அங்கத்தவர்கள் அனைவர்க்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து மகிழ்வடைகிறேன். ,இறுதியாக கலை மாலை மலர் சிறப்புடன் மலர்ந்து எல்லோர் உள்ளத்திலும் நறுமணம் வீச என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இ.குணநாதன் Med , SLEAS ,
( முன்னாள் அதிபர் )
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
( நிர்வாகம் )
வலயக் கல்வி அலுவலகம்
தீவகம் - வேலணை.
18.09.2013

## அத்தியார் இந்துக்கல்லூரியின் உருவாக்கத்தில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் அவர்களின் பங்களிப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துஇலக்கிய மரபிலும் இந்துப்பண்பாட்டு மரபிலும் முக்கிய பங்காற்றிய பேரறிஞர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.யாழ்ப்பாணமண்ணை பாரம்பரியமாகக் கொண்ட இவர்கள் அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்க அயராது உழைத்த பெருந்தகைகளாக விளங்குகின்றனர்.நீர்வேலியைப்பிறப்பிடமாகக் கொண்ட சிவசங்கரபண்டிதர் நாவலர் பெருமானாரின் பணிகளுக்கு உறுதுணையாக இருந்ததுடன் இந்துப்பண்பாட்டின் ஒரு கனதியான பாத்திரமாகவும் திகழ்ந்துள்ளார்.தமிழ்மொழியிலும் ஆழ்ந்த புலமைகொண்டவர்களாகவும் சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் இந்துசமயத்தத்துவம் தர்க்கம் ஆகியவற்றிலும் கிறிஸ்தவசமயத்திலும் சிறப்புத்தேர்ச்சிபெற்றவராக விளங்குகிறார்.

ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் அவர்களின்

1821 ஆம் ஆண்டு விரோதி வருடம் சித்திரை மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ரேவதி நட்சத்திரத்தில் அவதரித்த சிவசங்கர பண்டிதர் சிறப்பாண முறையில் கல்விகற்று பலரும் போற்றும் பண்புடையாளராக விளங்கிய இவருக்கு நீர்வேலியில் இவரது தாய் மாமனராகிய சின்னத்தம்பி என்பவரது புத்திரி தங்கமுத்து அம்மாளை பருவத்தே மணமுடித்து வைத்தனர். இவர்கள் வாழ்வின் நற்பேறாக சிவப்பிரகாசப்பிள்ளை சிவகுருநாதபிள்ளை ஆகிய இருவரும் பிறந்தனர். இவர்களில் சிவப்பிரகாசப்பிள்ளை என்பவரே அத்தியார் கல்லூரியின் உருவாக்கத்திற்கு காரணமாக திகழந்துள்ளார். அதாவது சிவசங்கர பண்டிதரின் சைவம் தமிழ் வேதம் ஆகமம் மீதுள்ள ஆழ்புலமைகாரணமாக தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்காக கிறீஸ்தவ மத கண்டனங்களை மேற்கொண்டு இவற்றை வளர்க்க அரும்பாடுபட்டார். இத்தகைய பின்னனி அவர் மகனுக்குக் கடத்தப்பட்டு சைவம் தமிழ் வேதம் ஆகமம் போன்றவற்றை வளர்க்கும் நோக்கில் ஒரு வித்தியசாலையை நீர்வேலியில் 1880 இல் நிறுவினார்.

ஆன்றைய காலத்தில் குறிப்பாக 18 ஆம் நூற்றாண்டளவில் நீர்வேலியில் மூன்று வகையான பாடசாலைகள் காணப்பட்டன. அவையாவன இலங்கை திருச்சபையால் அமைக்கப்பட்ட பாடசாலை கத்தோலிக்கப்பாடசாலை இந்துப்பாடசாலை என்பனவாகும். இவற்றுள் இந்துப்பாடசாலை சிவசங்கர பண்டிதர் குடும்பத்தவரால் அமைக்கப்பட்டது. " பண்டிதர்கோட்டம்" எனும் இவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் அமைக்கப்பட்டதனால் பண்டிதர் பாடசாலை என அழைக்கப்பட்டதோடு அது சைவபிரகாச வித்தியாசாலை என பதிவுப்பெயர் கொண்டதாக இவ் இந்துக்கல்லூரி விளங்கியது. இது ஒரு தனியார் இந்துப்பாடசாலையாக விளங்கியதுடன் இப்பாடசாலையில் 7 ஆம் 8ஆம் வகுப்புக்கள் வரை நடைபெற்றன.பிரத்தியோகமாக தமிழ் சைவ சமய வேத ஆகம இதிகாச புராண

சமஸ்கிருத வகுப்புக்கள் நடாத்தப்பட்டதுடன் உள்ளூர் பிள்ளைகளே கூடுதலாக அதிலும் குறிப்பாக பிராமணப் பிள்ளைகளே அதிகம் கற்றனர்.சிவப்பிரகாசபண்டிதர் குழாமே ஆசிரியராக செயற்பட்டனர். இதற்குச்சான்றாக அமையும் ஒருவரே அவர்காலத்தில் வாழ்ந்து நல்கிய பிராமணப்பெரியார்களில் ஒருவராகிய அருள்மிகு வாய்க்காற்தரவை விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுப்பிரமணிய ஆபதோத்தாரண குருக்கள் ஆவர்.

நுற்றாண்டுகளுக்கு மேல் இயங்கிய இப்பாடசாலை சிவப்பிரகாசபண்டிதரின் மறைவின் பின் அவரின் மகன் நடராஜப்பண்டிதரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.இக்காலத்தில் பண்டிதர்

குடும்பத்தினா் தமது சொந்நச்செலவில் காணி வாங்கி சாதாரண கொட்டில்கள் அமைத்து குருசிஸ்யப் பாரம்பரியத்துடன் கல்வி போதித்திருந்தனா்.

பல்வேறு சூழ்நிலை காரணமாக குறிப்பாக பொருளாதாரப்பிரச்சினை காரணமாக பண்டிதா் நடராஜரால் பாடசாலை நடாத்த முடியாத நிலைவந்து அதனை அவா் கையளிக்க விரும்பிய நிலையில் முதலியாா் அத்தியாா் அருணாசலம் அவா்கள் அதனை விலைக்கு வாங்கி தனக்கு சொந்தமாக்கினாா்.பண்டிதா் காலத்தில் இருந்த காணியை விட மேலும் பல காணிகளை வாங்கி பாடசாலையை விஸ்தரிக்கும் பணியில் அத்தியாா் அருணாசலம் அவா்'கள் ஈடுபட்டாா்.காலப்போக்கில் கட்டடங்கள் பலவும் அமைக்கப்பட்டு கல்விச்செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டன. இதனைத்தொடா்ந்து அத்தியாா் அருணாசலத்தின் பொறுப்பின் கீழ் தமிழ்ப்பாடசாலை இயங்கிவந்த அதேவேளை ஆங்கிலக்கல்வியை வீருத்திசெய்யும் நோக்குடன் ஒரு உபபாடசாலையான நீா்வேலி இந்து ஆங்கில்ப்பாடசாலையை 1929 இல் நிறுவினாா். 1945 இல் கலாநிதி ஊ.றுறு. கன்னங்கராவினால் இலவச கல்வித்திட்டம் நடைமுறைக்கு வந்த பொழுது "ஒரு முகாமையின் கீழ் சுதேச மொழி ஆங்கிலமொழிப் போதனைகள் கொண்ட பாடசாலைகள் ஒரே இடத்தில் அமையப்பெற்றிருப்பின் அவற்றை ஒன்றாக இணைக்க முடியும்" என கல்விச்சட்டம் வழிவகுத்தமையால் "அத்தியாா் இந்துக் கல்லூாியாகிய தமிழ்ப்பாடசலையும் 1929 இல் ஆரம்பிக்கப்பட்ட நீா்வேலி இந்து ஆங்கிலப்பாடசலையும் இணைக்கப்பட்டு அத்தியாா் இந்துக் கல்லூாி என்ற நாமத்தில் முழுமைபெற்று இயங்கத்தொடங்கியது. இது காலப்போக்கில் பல்வேறு அதிபா்களால் நிா்வகிக்ப்பட்டு அரச கல்வித்திட்டங்களின் நடைமுறை மற்றும் உதவிகளுக்கேற்ப பல்லாயிரக்கணக்கான மாணவா்களை உருவாக்கி உலகிற்கு தந்தவண்ணமுள்ளது. இக்கல்லூாி அன்னையின் உருவாக்கத்திற்கு வித்திட்ட பண்டிதா் குடும்பத்தவா் என்றும் நினைவுகூரத்தக்கவா்கள். விருட்சமாக மலா்ந்திருக்கும் இன்றைய கல்லூாி என்ற மரத்திற்கு விதையிட்டவா்களாக விளங்கும் பண்டிதா் குடும்பத்தவரது தத்துவ உணா்வும் தியாக உணா்வும் என்றும் தொடா்துவரும் சந்ததியினரால் காலம் காலமாக நினைவிலிருத்தி போற்ற வேண்டும்.

உலகில் பாாிய வெற்றிகளும் மிகப்பெரிய சாதனைகளும் கடுமையாண சவால்களுக்கு உட்பட்டபின்னா்தான் நிகழ்ந்ததை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. பல அறிஞா்கள் தங்களது வாழ்நாளில் பல்வேறு சோதனைகளுக்குட்பட்டு பல்வேறு தியாகங்களை மேற்கொண்டு உருவாக்கிய கொள்கைகளும் கோட்பாடுகளும் கருவிகளுமே இன்றைய விஞ்ஞானத்தின் வளா்ச்சிக்கு வித்திட்டது. அதேபேல இப்பாடசாலையின் கல்விவளா்ச்சி சங்கரபண்டிதா் பரம்பரையினராலும் அத்தியாா் குடும்பத்தினராலும் மேற்கொண்ட தியாகங்களினாலும் சோதனைகளினாலும் விளைந்த முத்துக்களாகும்

சைவ சமயம் தமிழ் போன்றவற்றை வளா்க்கவும் பேணிப்பாதுகாக்கும் நோக்குடனும் இயற்கையுடன் ஒன்றித்து குருகுலப்பாரம்பாியத்துடன் கூடிய கல்வியை நிலைநாட்ட வித்திட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் விதை இன்று மரமாகி விருட்சமாகி அத்தியாா் இந்துக்கல்லூாியாக விளங்கி பல புலமையாளா்களையும் அறிஞா்களையும் உருவாக்கியதுடன் எமது பண்பாட்டின் அணிகலாக விளங்குகின்ற எமது கல்லூாித்தாயின் வரலாற்றுப்பொட்டகத்தினை அடுத்துவரும் சந்ததியினரும் அறியவைப்பதற்காக இதை எழுதுகின்றேன் நானும் ஒரு பண்பாட்டின் குழந்தையாக........

*பா. சசிக்குமாா்*
*ஆசிாியா்,*
*யா/ கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூாி.*
*(நீா்வேலி தெற்கு, நீா்வேலி.)*




Western Jewellers
Jewellers & Gem Merchants
230 Upper Tooting Road
London
SW17 7EW
Tel: 020 8767 3445
5 Plaza Parade
29-33 Ealing Road
Wembley
HAO 4YA
Tel: 020 8903 0909
மங்கையர் மனம் மகிழ
ஆடவர்கள் அதிசயிக்க
பெண்களெல்லாம்
பெருமைகொள்ள
குழந்தைகளும் குதூகலிக்க
மங்காத பொன்நகைகள்
மலிவோடு நீங்கள்பெற
நாளெல்லாம் நனைவிலுள்ள
தங்க நகைக்கூடம்
வாழ்வில் வசந்தம் வீச..
உங்கள் தெரிவுகளுக்கு....
122 Upper Tooting Road
London
SW17 7EN
Tel: 020 8672 1900
Silk Emporium

# Accident Courtesy Ltd

*Always First in Courtesy*

# வாகன விபத்தா ?

## மாற்று வாகனம் தேவையா ?

## Do you need a Replacement Car ?

## நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டுமா ?

- உங்களது விபத்து எவ்வாறு நடந்தது என்பதை காப்புறுதி கூட்டுஸ்தாபனத்திற்கு அறிவிக்க வேண்டுமா ?
- உங்களுக்கு பிடித்த வாகன உற்பத்தியாளர்களிடமே வாகனத்தை திருத்த வேண்டுமா ?
- உங்களுக்கான Injury Claim மற்றும் வீண் செலவீனங்களுக்கு நஷ்டஈடு பெற்று தர வேண்டுமா ?
- விபத்து நடந்த இடத்திலிருந்து வாகனத்தை அப்புறப்படுத்த வேண்டுமா ?

**அனைத்தையும் இலவசமாக எவ்வித முகவர் கட்டணம் இல்லாமல் பெற்றுக் கொடுக்கும் ஒரே நிறுவனம்.**

No excess to pay
100% Injury Compensation



எம்மை நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு எவ்வித கொமிஷனும் அறவிடப்படமாட்டாது அதாவது 100% நஷ்டஈடு பெறுவீர்கள்.

இலவச தொலைபேசி இலக்கம்

**0800 2321523**

Mobile callers call on

**0208 4274060**

Email us : info@accidentcourtesyltd.co.uk

Visit our local office : Barking, Harrow, Croydon & Macclesfield.



Shampavi Printers, Jaffna. Tel.: 021 222 4143. e-mail: shampavi2009@gmail.com